**கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி**
**S.C.No.186/2021**

2024 ஆம் வருடம் டிசம்பர் மாதம் 05 ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.பன்னீர்செல்வம் (அ.சா.1) | தொழில் | : | வியாபாரம் |
| த/பெ., க/பெ. | : | பொன்னுச்சாமி | வயது | : | 44 |
| கிராமம் | : | காரத்தொழுவு | இனம் | : | ஆண் |
| தாலுகா | : | மடத்துக்குளம் | நாள் | : | 05.12.2024 |
| மாவட்டம் | : | திருப்பூர் | | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளனர்.

**முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.**

நான் தற்சமயம் மடத்துக்குளம் தாலுகா, காரத்தொழுவு கிராமத்தில் வசித்து காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. 5, 6 வருடத்திற்கு முன்பு எனக்கு காயம் ஏற்பட்டது. சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு பெரிச்சிபாளையம் கிராமத்திற்கு வியாபாரத்திற்காக சென்றிருந்தேன். அங்கு கூட்டமாக இருந்தது. அதைப் பார்க்கச் சென்றபோது கல் என் இடுப்பில் மீது பட்டு காயம் ஏற்பட்டது. அதற்கு பழனி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதியாகி சிகிச்சை பெற்றுக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்களா என்று தெரியவில்லை. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல.

(அரசு தரப்பு வேண்டுகோளை ஏற்று சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்படுகிறது)

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 15.11.2017 ஆம் தேதி மதியம் 02.30 மணிக்கு பெரிச்சிபாளையம் சுந்தரம் மளிகை கடை அருகே ரவி, நடராஜ் மற்றும் நானும் நடந்துவந்து கொண்டிருந்தோம் என்றும், அப்பொழுது அங்கு வந்த அன்பழகன் மற்றும் ஆஜர் எதிரிகள் எங்களை வழிமறித்தார்கள் என்றும், அசிங்கமாக பேசியும், அவர்களை வெட்டிக்கொல்லுங்கடா என அன்பழகன் கூறினார் என்றும், அன்பழகன் தான் வைத்திருந்த அருவாளால் ரவியை வெட்ட முயன்றபோது நான் தடுத்தேன் என்றும், அதில் எனக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது என்றும், சத்தியராஜ் என்னை கல்லால் எனது இடது தொடையில் குத்தி காயம் உண்டுபண்ணி உலகநாதன், நடராஜனை தான் வைத்திருந்த கத்தியால் வயிற்றில் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும், ஜெகநாதன், மோகன்ராஜ், விவேகானந்தன் ஆகியோர் தாங்கள் வைத்திருந்த இரும்புக் கம்பி போன்ற ஆயுதங்களால் எங்களை அடிக்க வரவும், உலகநாதன் தான் வைத்திருந்த கத்தியால் நடராஜன் இடது பக்க கையில் குத்தி காயம் ஏற்படுத்தினார் என்றும், நான் சத்தம்போடவே அங்கிருந்து எதிரிகள் ஓடிவிட்டார்கள் என்றும், அப்போது எதிரிகள் கொலை மிரட்டல் விட்டார்கள் என்றும், பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது போலீசார் விசாரிக்க வாக்குமூலம் கொடுத்தேன் என்றும், அதில் கையெழுத்து செய்தேன் என்றும், போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு, தற்போது எதிரிகளுக்கு பயந்து பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல.

K BHARATHI
Digitally signed by K BHARATHI
Date: 2024.12.05 18:19:41 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**பழனி.**